## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.26/2011

2025 –ம் ஆண்டு அக்டோபர் மாதம் 06 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 06.10.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. அகிலாண்டேஷ்வரி (PW–1) | வயது | : | 47/2025 |
| த/க பெயர் | : | திரு. ரவிச்சந்திரன் | தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) இந்த வழக்கினை முதலில் தாக்கல் செய்த ஜெயராமன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது அப்பா. அவர் எப்போது இறந்தார் என்றால் இந்த வழக்கை 2011 ல் தாக்கல் செய்து 2015 ல் காலமாகிவிட்டார். எனது அப்பா இறந்த பின்னர் எனது தாயார் மற்றும் எனது உடன் பிறந்தவர்கள் சேர்ந்து வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் உள்ளபோது எனது அண்ணன் 3ம் வாதி கல்யாணசுந்தரம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருக்கு கலைமணி என்ற மனைவியும், சந்தோஷ் என்ற மகனும் உள்ளனர் என்றால் சரிதான்.
2) பிரதிவாதிகள் யார் என்றால் சிங்காரவேலு பத்தரின் மகன், மகள் ஆவார். சிங்காரவேலு பத்தருக்கு பிரதிவாதிகளை தவிர வேறு யாரும் வாரிசுகளாக உள்ளார்களா என்றால் இல்லை. எனது அப்பா உயிருடன் இருந்போது சிங்காரவேலு பத்திரின் மீது வழக்கு தாக்கல் செய்தாரா அல்லது வேறு நபர்கள் மீது வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் சிங்காரவேலு பத்தரின் மகன்கள் மீது வழக்கு தாக்கல் செய்தார்.
3) பிரதிவாதிகள் எனது அப்பாவுக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் OS.No.194/2010 வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கின் சொத்தும் தாவா சொத்தும் ஒரே சொத்து என்றால் சரிதான். தாவா சொத்து எங்கு உள்ளது என்றால் வேங்கைபுரத்தில் உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 153/3 விஸ்தீரணம் 216 குழி. தாவா சொத்து என்ன வகையை சேர்ந்தது என்றால் ஆற்று பாசன நஞ்சை நிலம்.

4) தாவா சொத்தில் தற்போது என்ன உள்ளது என்றால் தரை தளம், முதல் தளத்துடன் கூடிய மாடி வீடு உள்ளது. எவ்வளவு சதுரடி இருக்கும் என்றால் 1500 சதுரடி இருக்கும். தாவா சொத்தில் உள்ள வீடு எப்போது கட்டப்பட்டது என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் 2006 ல் கட்டப்பட்டது. தாவா சொத்தில் வீடு உள்ள விபரம் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

5) பிரதிவாதிகள் என்ன பரிகாரம் வேண்டி அசல் வழக்கு எண்.194/2010 தாக்கல் செய்தார்கள் என்றால் தாவா சொத்தில் உள்ள வீட்டை அகற்றி சொத்தை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டி வழக்கை தாக்கல் செய்தார்கள். தாவா சொத்தானது சிங்காரவேலு பத்தருக்கு சொந்தமானது என்றும் அவர் காலமானதுக்கு பின்னர் அவரது வாரிசுகளான பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்து எனது அப்பா ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளதால் அவற்றை அகற்றி சொத்தி அவர்களிடம் ஒப்படைக்க வேண்டி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

6) இந்த வழக்கிலும், அசல் வழக்கு எண்.194/2010 வழக்கிலும் எனது அப்பா ஜெயராமன் தான் ஆட்சேபணை செய்து வழக்கு நடத்தி வந்தார் என்றால் சரிதான். அவரது ஆட்சேபணையில் பிரதிவாதிகள் இடத்தில் வீடு கட்டவில்லை என்றும், அரசு புறம்போக்கு இடத்தில் வீடு கட்டியதாக சொல்லியுள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

7) எனது அப்பா ஜெயராமன், எனது அண்ணன் கல்யாணசுந்தரம் உயிருடன் இருந்தபோது இந்நீதிமன்றத்தில் தாவா சொத்திலுள்ள வீடு பிரதிவாதிகளுக்கு சொந்தமான இடத்தில் உள்ளதா அல்லது அரசு புறம்போக்கு இடத்தில் உள்ளதா என்று அறிந்து கொள்ள நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி தாக்கல் செய்த மனு இந்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்ததை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

8) பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பாகிவிட்டதால் எனது அப்பா பின் யோசனையின் பேரில் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.194/2010 வழக்கில் எங்களது தரப்பில் சரியான கட்சி நடத்த முடியாத காரணத்தினால் ஓராண்டு கழித்து 26/2011 இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

9) பிரதிவாதிகள் இந்த வழக்கில் என்ன ஆட்சபேணை செய்துள்ளார்கள் என்று படித்து பார்த்தேனா என்றால் கிரய ஒப்பந்தம் வா.சா.ஆ–1 ஆனது பொய்யானது என்று சொல்லியுள்ளார்கள். அசல் வழக்கு எண்.194/2010 வழக்கு முடிந்த பின்னர் எனது அப்பா வா.சா.ஆ–1 ஆவணத்திலுள்ள சிங்காரவேலுவின் கையெழுத்தை மோசடியாக இட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

10) சிங்காரவேலு பத்தர் உயிருடன் இருந்த காலத்தில் பல சமூக நல சங்கங்களிலும், வணிகர் சங்கங்களிலும் தலைவராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். அவருடைய கையெழுத்து பல சமூக நல சங்கங்களின் நோட்டுகளிலும், வணிகர் சங்க

நோட்டுகளிலும் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ–1 ஆவணம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள சிங்காரவேலு பத்தரின் கையெழுத்து மோசடியானது என பிரதிவாதிகள் ஆட்சேபணை செய்வதால் மேற்படி அந்த கையெழுத்தை சிங்கார வேலுவின் கையெழுத்துதான் என்பதை நிரூபிக்க கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி நிரூபிக்க எந்த நடவடிக்கையும் நாங்கள் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

11) வா.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள சிங்காரவேலு பத்தரின் இரண்டு பக்கங்களில் உள்ள கையெழுத்துகளும் ஒன்றுக்கொன்று வெவ்வேறாக உள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. சிங்காரவேலு பத்தர் எப்போதும் தனித்து செல்லாமல் அவருடன் நான்கு பேருடன்தான் செல்வார் என்பதால் அவருடன் செல்லும் மற்ற நபர்கள் வா.சா.ஆ–1 ஆவணத்தில் கையெழுத்திட்டார்களா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையெழுத்திட்டுள்ள மற்றும் ஆவணத்தை எழுதிய நபர்கள் அனைவரும் எனது ஊரைச் சேர்ந்த எனது வகுப்பை சார்ந்தவர்கள் என்றால் சரிதான்.

12) மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்துக்கும் தாவா சொத்திற்கும் இடைப்பட்ட தூரம் இரண்டு மைல் இருக்கும் என்றால் சரிதான். எனது ஊரில் ஆவண எழுத்தர், பத்திர எழுத்தர் தொழில் புரியும் நபர் யாரும் வேங்கைபுரத்தில் இல்லை என்றால் சரிதான். வேங்கைபுரத்தில் அத்தியாவசிய பொருட்கள் வாங்குவதற்கு நகரத்தை நோக்கிதான் வர வேண்டும் என்றால் சரிதான். எனது அப்பா ஜெயராமன் உயிருடன் இருந்தபோது ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். எனது அப்பா கட்சியின் பொறுப்பில் இருந்து வந்ததால் சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ளவர்களையும், ஆவண எழுத்தர்களையும் நன்கு தெரியும் என்றால் தெரியும்.

13) எனது அப்பா மன்னார்குடி ஒத்த தெருவில் குடியிருந்தார் என்றால் சரிதான். எனது அப்பா தூங்கி எழுந்ததும் மன்னார்குடி நகரத்திற்கு தான் வருவார், வேங்கைபுரத்திற்கு செல்வதில்லை என்றால் சரிதான். எனது அப்பா தொழில் முறையாக மன்னார்குடியில் தான் எப்போதும் இருப்பார் என்றால் சரிதான். வா.சா.ஆ–1 ஆவணம் வேங்கைபுரத்தில் எழுதப்பட்டதாக சொல்லியுள்ளதால் அந்த ஆவணம் மோசடியானது என்றால் சரியல்ல. சிங்காரவேலு பத்தருக்கு தாவா சொத்தினை தவிர இதர சொத்துக்கள் அந்த கிராமத்தில் உள்ளதா என்றால் உள்ளது.

14) வா.சா.ஆ.1 ஆவணமான கிரய ஒப்பந்தம் எந்த வருடம் எழுதப்பட்டது என்றால் 2001 ல் எழுதப்பட்டது. எவ்வளவு நாள் கெடு வைத்து எழுதப்பட்டது என்றால் ஆறு மாத காலம் வைத்து எழுதப்பட்டது. எந்த தேதியில் கிரய ஒப்பந்தம் முடிவிற்கு வந்தது என்றால் செப்டம்பர் 2001 ல் முடிவிற்கு வந்தது. வழக்கை எனது அப்பா எப்போது தாக்கல் செய்தார் என்றால் பத்து வருடம் முடிந்து எனது அப்பா தாக்கல்

செய்துள்ளார். பத்து வருட கால தாமத்திற்கு என்ன காரணம் என்று எனது அப்பாவை கேட்டாதான் தெரியும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

15) எனது அப்பா 22.12.2010 ல் தான் தாவா சொத்தினை எனது அப்பாவிற்கு கிரயம் செய்து தர வேண்டுமென பிரதிவாதிகளுக்கு சட்ட அறிவிப்பு வா.சா.ஆ.2 யை அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கு பிரதிவாதிகள் 06.01.2011 ல் பதில் அறிவிப்பை வா.சா.ஆ.3 யை எனது அப்பாவிற்கு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.194/2010 வழக்கு தாக்கல் செய்திருக்கும் விபரத்தை குறித்து சொல்லியுள்ளார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

16) எனது அப்பாவிற்கும் சிங்காரவேலு பத்தருக்கும் இடையே ஏற்பட்ட ஆவணமான வா.சா.ஆ.1 மோசடியானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணமானது 15.03.2001 ல் ஏற்பட்டு ஆறு மாத காலம் கெடு முடிந்து மூன்று ஆண்டுக்குள் வழக்கை தாக்கல் செய்யாததால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எந்த வகையிலும் தாவா சொத்தை எங்களுக்கு எழுதி தர கடமைப்பட்டவர்கள் இல்லை என்றால் சரியல்ல.

17) தாவா சொத்தை பொறுத்து அசல் வழக்கு எண்.194/2010 வழக்கில் எதிர் கட்சி நடத்த முடியாததால் வா.சா.ஆ.1 ஆவணத்தை மோசடியாக உற்பத்தி செய்து இந்த வழக்கை நடத்தி வருவதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நாங்கள் கேட்கின்ற பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.10.10 16:49:21 +0530

District Munsif
Mannargudi.